முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

24.10.2024

1. ஞான வேலியிட்டு கலியினில்
ஞானிகளை உருவாக்க வேண்டி
ஞானபண்டிதன் அவதாரமாகி இனிதே
ஞான ஜோதி கலந்து அருளும்

2. அருளும் ஆறுமுக அரங்கன் யானும்
அறிவிப்பேன் குரோதி துலை திங்கள்
வரமென முதல் குருவார அருளாசி
வழங்குவேன் என் மக்கள் வளம்பெற

3. வளம்பெற பிரணவக் குடில் தன்னில்
வரம் தந்து அரங்கன் யான் அருள
சலனமற உலக மக்கள் எல்லாம்
சார்ந்துமே பிரணவக்குடில் நோக்கிவர

4. வருகவே உலகோரின் வேண்டல்
வரமாக என் அனுகூலத்தால்
பெருமளவில் வெற்றி கண்டுமே
பிரச்சனை இல்லா வாழ்வு காண்பர்

5. காண்கவே கருமவினை வெல்லும்
கந்தப் பெருமானின் தருமத்தில்
உண்மைபட பொருளுதவி செய்து
உடல் உழைப்பாய் தொண்டும் புரிய

6. புரியவே தீவினைகள் அகன்று
புண்ணிய பலத்தால் நல்வினை கூடி
அறிவுத் தெளிவு ஞானபலமுடன்
அரங்கன் யான் தேடுகின்ற ஒருவர் ஆக

7. ஆகவே வரும் மக்களெல்லாம்
அரங்கனென் வழி ஞானிகளாக
வகைபட செகத்தினில் தேறி
வருங்காலம் மாற்றும் சக்திகள் ஆவர்

8. ஆகவே பிரணவக் குடிலில்
அரங்கன் என் தயவாக
மிகைபட தொண்டர் பெருமக்களை
மேலாக கௌரவித்து வழிநடத்தி

9. வழிநடத்தி விழாக் காலங்களில்
வழங்கும் உதவிகள் யாவும்
தெளிவுபட யானே நிர்வாகம் வழி
தந்தருளி அனுகூலம் தர

10. தருகவே என் சீடர் மக்கள்
தக்க என் உத்தரவாக ஏற்று
பெருமை மிக்கத் தொண்டிலே
பூரண சரணாகதி கொண்டு நடக்க

11. நடக்கவே அனைவருக்கும் பாதுகாப்பு
ஞானமும் அருள் பொருள் வளமும்
இடரின்றி பெருக அருள் செய்வேன்
எல்லாமுமாக துணை நிற்பேன்
அரங்கமகான் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—